இந்திய ஸ்கந்தனும் இரானிய ஸ்ரோஸாவும்

(Iranian Sraosa and Indian Skanda by Sukumar Sen, M.A., Ph.D.)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : சுகுமார் சென் , M.A. / PhD

தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா (nrj_1945@yahoo.com)

ஏவிஸ்தியக் கடவுளான ஸ்ரோசாவுக்கும் (**Avestan deity Sraosa**) ஸ்கந்த-குமார-கார்திகேய-குஹாவிற்கும் இடையிலான சில ஒற்றுமைகளை எனக்குத் தெரிந்தவரை நாம் முன்னர் கவனித்து இருப்பதாக தெரியவில்லை. சமஸ்கிருத மொழியில் ஸ்ரோசா என்றால் ஸ்ரவுசா என்று அரத்தம் ஆகும். (ஷ்ரா என்பதின் இறந்த காலச் சொல். கீழ்படிந்திருத்தல், மற்றும் சார்ந்து இருப்பது என்று கூறலாம். இது 8 முதல் 14 ஆம் ஆண்டுகளுக்கு இடைக் காலத்தில் சூரிய பகவானின் இருந்த இரண்டு உதவியாளர்களின் அடைமொழிப் பெயராக இருந்ததாக சிலகளைப் பற்றி எழுதப்பட்டு உள்ள ஆராய்ச்சிக் குறிப்பேடுகளில் கூறப்பட்டு உள்ளது.) 12 ஆம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டுள்ள ஒரு மேற்கோளில் காணப்படுவது இது.

யமோபீ தக்ஷைன் பர்ஸ்வே க்யாடோ மாதாரா-சம்ஜ்யவானா
பூர்வாத்வரே ஹராகுஹாவ் ராஜஸ் ரசாவ் க்ரமினா தௌ
(yamo'pi daksine pārs've khyāto māthara-samjnāyaya,
pūrvadvāre haraguhau rājas'rasau kramena tau.)

ராஜஸ் ரசாவ் என்றால் " மன்னன் கீழ் மிக அடக்கத்துடன் பணி புரியும் தூதன் " என்று ஹரா மற்றும் குஹாவைக் பற்றிக் குறிக்கின்றது. ஏவிஸ்தியா என்ற கடவுளின் நிஜப் பெயர் மறைந்து, ஸ்ரோசா என்று மாறி விட்டது. அவர் ஹஹுரா மாஸ்டா என்றவரிடம் மிகுந்த கவனத்துடனும் அடக்கமாகவும் பணி புரிந்த தூதன் என்ற பெயர் பெற்றுள்ளார். அந்த இரண்டு கடவுட்களும் இளமையும், நல்ல தோற்றமும் கொண்டவர்கள். விரைவாகவும், புத்துணர்வுடனும் வெற்றிகரமாகவும் வேலைகள்செய்தவர். ஸ்ரோசா அசுரர்களை அழித்தவர் (**jantā daēvayā drujō**) மாறாக ஸ்கந்தனோ தேவர்களின் படைத் தலைவர். காமவெறி பிடித்த, வெறுக்கத்தக்கவனான அசுரன் எய்ஸமா என்பவனை அழித்தவர் அந்த இரானியக் கடவுள் என்று

நம்பப்பப்படும் அதே சமயம் தாரகாவை வதம் செய்தது அவருக்கு ஈடான மற்றவரே என புகழப்படுகின்றார். (ஆனால் பிரம்ம புராணங்களில் அவனை அழித்தவர் ஸ்கந்தனின் தந்தையான சிவபெருமானே (*smarajit*) என்றும், புத்த மத புராணங்களின்படி அவனை அழித்தவர் புத்தரே (*mārajit*) என்றும் கூறப்பட்டு உள்ளது.) ஏவஸ்தானில் ஸ்ரோசாவின் வாகனம் மயில் என்று கூறப்பட இந்துப் புராணங்களிலும் கார்த்திகேயர் மயில் மீது செல்பவர் எனக் கூறப்பட்டு உள்ளது. நான்கு குதிரைகள் இழுத்துச் செல்லும் இரதத்தில்தான் ஸ்ரோசா பிறந்தாராம். ஆனால் பிரும்ம புராணங்களில் அப்படி எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் ரிக் வேதத்தில் அது குறித்து மறைமுகமாகக் கூறும் விதத்தில் செய்தி உள்ளது. யமாவின் பாடல்களில் (துதிப்பாடல்135) குமரனை என சக்கரம் இல்லாத தேர் அதாவது ஒரு கம்பில் நிற்கும், ஆனால் நான்கு புறத்தையும் நோக்கக் கொண்டுள்ள முகங்கள் என யமனின் தேருடன் இணைத்து எழதப்பட்டு உள்ளது. ஆகவே அந்தக் குமாரனை வேத காலக் குமரனுக்குப் பின் இரானிய ஸ்ரோசாவின் இன்னொரு பக்கமாகவே சேர்த்து உள்ளனர் என்று எண்ணத் தோன்றுகின்றது.